

# சித்திரத்தேர்
## சிறப்பு மலர்
2018




# ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்
ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.

# சித்திரத்தேர் சிறப்புமலர்
2018




**அருள்மிகு ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்**

ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.

05.09.2018

# அருள்மிகு ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்

ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.



**வெள்ளோட்டம் - 28.06.2017**

**தேரோட்டம் - 29.06.2017**

# புதிய சித்திரத்தேர்



# ஆரையம்பதி - 01, ஆரையம்பதி
# ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலய பரிபாலன சபையினர்



திரு. கோ. கிருபானந்தம் J.P
தலைவர்



திரு. க. வனராசா
செயலாளர்



திரு. பூ. லோகேஸ்வரன்
பொருளாளர்



திரு. ச. சந்திரகுமார்
உப தலைவர்



திரு. பூ. சிவயோகராசா
உப செயலாளர்

# பேராலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள்




திரு. சி. கோணலிங்கம்



திரு. கா. சோமசுந்தரம்



திரு. கா. பத்மநாதன்



திரு. கா. விவேகானந்தராசா



திரு. க. கோபாலநாதன்



திரு. த. இந்திரராசா



திரு. த. ஜெகநாதன்



திரு. சி. ஜெயக்குமார்



திரு. ந. பேமிகரன்



திரு. த. பாஸ்கர்

## ஆரையம்பதி – 01, ஆரையம்பதி
## ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்



சிவஸ்ரீ நா. சிறிரங்கநாதக் குருக்கள்
பிரதம குரு



சிவஸ்ரீ சி. மேனன் ஐயா
உதவிக்குரு

## சித்திரத்தேரை உருவாக்கிய ஸ்தபதிகள்



விஸ்வப்பிரம்மஸ்ரீ
முருகானந்தன் சிவநாதன்



விஸ்வப்பிரம்மஸ்ரீ
முருகானந்தன் சிவகுமாரன்



# ஆசியுரை

ஆலய மஹோற்சவ வழிபாடுகளில் ஒன்றாக விளங்கும் ரதோற்சவமானது ஆன்மாக்கள் மலநீக்கம் பெற்று இறைவனின் பேரருளைப் பெற்றுய்வதாகும். ஆன்மாக்கள் தங்களுடைய வினைப்பயனை அழித்து வாழ்க்கை என்ற தேர் சிறந்த முறையில் ஓடுவதற்கு நமது இருதய ஸ்தானத்தில் இறைவனை நிலைநிறுத்தி தேரின் கலச நிழலின் கீழ் திருவருளையும் பெற்றுய்ய வேண்டும் என்ற மெய்ப்பொருளை உணர்த்தி நிற்கின்றது.

சுவாலித்தெரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது ஆன்மாக்களின் கர்ம வினைப்பயன்களை அழித்து இறைவனுடைய திருவருட் சக்தியில் இரண்டறக் கலக்க வேண்டும் என்ற மெய்ஞானப் பொருளைச் சுட்டி நிற்கின்றது. எமது பேராலயத்தில் நிலவிய குறைபாடு எம் பெருமானுடைய திருவருளால் நிவர்த்தி செய்யப்பட்டு, 2017ம் ஆண்டு ஆனி மாத உத்தர நட்சத்திர தீர்த்தோற்சவத்திற்கு முதல் நாள் பூரணை- புஸ்கலை சமேத ஹரிஹர புத்திரேஸ்வரப்பெருமான் புதிய தேரில் ஆரோகணித்து அடியார்களுக்கு காட்சியளித்தார். எம் பெருமானுக்கு அமைக்கப்பெற்ற இத்தேரில் எமது பேராலய பிரம்மோற்சவத்தின் ஒன்பதாம் நாளில் உற்சவர் ரதத்தில் எழுந்தருளி ஆரோகணித்து எல்லோருடைய பாவத்தையும் அழித்து, நாம் இறையருள் பெற்றுய்ய பூரணை - புஸ்கலை சமேத ஹரிஹர புத்திரனின் திருவருள் பெற்று வாழ்வோமாக என்று ஆசியுரையுடன் ஆசீர்வதிக்கின்றேன்.

**பிரதிஷ்டா கிரியா கலாபமணி**
**சிவஸ்ரீ நா. சிறிரங்கநாதக் குருக்கள்**
ஸ்ரீ பரமநயினார் பேராலயம்.
ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.



# ஆசியுரை

முதலில் இறைபதம் பணிந்து, தேரானது ஆன்மாக்களின் கர்ம வினைப் பயன்களை அழித்து இறைவனுடைய திருவருட் சக்தியில் இரண்டறக் கலக்க பேண்டும் என்ற மெஞ்ஞானப் பொருளை சுட்டி நிற்கின்றது. எமது பேராலயத்தில் தேர் இல்லை என்ற குறைபாட்டை எமது பேராலய நிர்வாக சபையினர் மிகவும் குறுகிய காலத்தில் அதாவது 2017ம் ஆண்டு புதிய தேரினை நிர்மாணித்து இக் குறைபாட்டை நிவர்த்தி செய்துள்ளனர். இத் தேர் பேராலயத்தில் அமைக்கப்பட்டு 2017ம் ஆண்டு ஆனி உத்தர நட்சத்திரத்தின் முதல் நாள் எம்பெருமான் புதிய இரதத்தில் எழுந்தருளி ஆரையம்பதியை வலம்வந்து எல்லோருடைய மலப் பாசத்தையும் அழித்து பூரணை புஸ்கலை சமேத ஹரிஹரபுத்திரன் திருவருள் பெற்று வாழ்வோமாக!

எமது பேராலயத்தின் திருப்பணிகளை செய்து வரும் இப்பேராலய பரிபாலன சபையினரும், மக்களும் எமது பேராலயத்தில் தங்களது திருப்பணிகளை செய்து நீடூழி காலம் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.


**சிவஸ்ரீ சி. மேனன் ஐயா**

உதவிக்குரு,

ஸ்ரீ பரமநயினார் பேராலயம்,

ஆரையம்பதி - 01.

ஆரையம்பதி



# முகவுரை

சகல வளங்களும் நிறைந்து காணப்படும் எம் பதியான ஆரையம்பதியின் வடக்கு எல்லையில் பூரணாதேவி, புஷ்கலாதேவி சமேதம் வீற்றிருந்து அடியார்கட்கு அருள்பாலிக்கும் ஹரிஹர புத்திரரான பரமநயினாருக்கு பணி செய்யக் கிடைத்தமையானது பெரும் பாக்கியமாகும்.

எம்பெருமானுக்கு எமது பரிபாலன சபைக் காலத்தில் மக்கள் வழங்கிய பேராதரவினால் இருவருடம் நான்கு மாதகால இடைவெளியில் திரிதள இராஜகோபுரத்தைக் கட்டி முடித்து மஹா கும்பாபிஷேகமும் செய்யக் கூடியதாக இருந்தது. அந்நிகழ்வின் பின் ஐயனுக்கு சித்திரத் தேர் ஒன்று அமைக்க வேண்டுமென்ற மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவும், எமது பரிபாலன சபைக் காலத்தினுள் இதனைச் செய்துவிட வேண்டும் என்ற சிந்தனையுடனும் நாம் மக்களிடம் ஆதரவு கோரினோம். ஆனால் எங்கள் அன்பிற்கினிய மக்கள் சித்திரத் தேர்ப் பணிக்கு அதிகூடிய ஆதரவை வழங்கினர்.

இராஜகோபுரமானது ஓர் ஆலயத்தின் காற்பகுதியாகும். ஆனால் ஓர் ஆலயம் பிரசித்தி பெறவேண்டுமாயின், அது ஆவணப்படுத்தப்படவேண்டும். அதற்கு அவ்வாலயத்தின் சிறப்பைக் கூறும் நூல்கள், ஊர்கூடிச் செய்யும் திருவிழா போன்றவை சான்றாக அமைகின்றன. "ஊர்கூடித் தேர் இழுத்தால் கோடி நன்மை' என்று முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். இக்கூற்றிற்கு அமையவே, எம் ஊர் மக்கள் யாவரும் வடம் பிடிக்க, எமது ஊரையே ஐயன் சுற்றி வலம் வந்து அருள்மழை பொழிந்தார். எம்மைப் பொறுத்தவரையில் எம்பெருமானின் சித்திரத் தேரானது எமதூரின் மக்கள் யாவரையும் ஒன்றுசேர்க்கும் ஒரு சமாதானச் சின்னமாகும். இதற்காகவே எமது மக்கள் யாவரும் ஒருமித்து வடம்பிடித்து, வழியெங்கும் நிறைகுடங்கள் வைத்து ஐயன் அருளினைப் பெற்றிருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

எமது சித்திரத் தேரினை வடிவமைத்த சிற்பாச்சாரியார்களான யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. மு. சிவநாதன், திரு. மு. சிவகுமாரன் குழுவினர் மிகமிகத் திறமையாகவும் அழகாகவும்

கலைநயமிக்கதாகவும் மூன்று மாதங்களினுள் அதனைச் செய்து முடித்தார்கள் என்றால் எல்லாம் அவன் செயலே! அத்துடன் அவர்களும் எம் பேராலய வரலாற்றில் மறக்க முடியாதவர்களே!

எமது வரலாற்றில் யாவரையும் திரும்பிப் பார்க்க வைத்த எம் பெருமானின் சித்திரத் தேரினை அமைக்க உதவிய பெருமைகள் அனைத்தும் எம்மக்களையும் சிற்பாச்சாரியார்களையும் தேர்த்திருவிழாவினை மிகவும் சிறப்பான முறையில் நடத்திய எமது பேராலய பிரதம குரு சிவஸ்ரீ நா. சிறிரங்கநாதக் குருக்கள் ஐயா, உதவிக்குரு சிவஸ்ரீ சி. மேனன் ஐயா மற்றும் பரிபாலன சபையின் சகல உறுப்பினர்களையுமே சாரும். அவர்கள் யாவருக்கும், மற்றும் எமக்கு ஆதரவு வழங்கிய அனைத்து இதயங்கட்கும் எமது பரிபாலன சபை சார்பாக சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவிப்பதுடன், யாவரும் நோய் நொடிகளின்றி சீரும் சிறப்புமாக பல்லாண்டு வாழவேண்டுமென ஐயப்பனைப் பிரார்த்திக்கின்றேன்

"சுவாமியே சரணம் ஐயப்பா"

என்றும் இறைபணியில்,
**கோ. கிருபானந்தம் (J.P)**
தலைவர்
ஸ்ரீ பரமநயினார் பேராலயம்
ஆரையம்பதி - 01,
ஆரையம்பதி.



# வாழ்த்துரை

ஈழத்தமிழ் நாட்டின் மட்டக்களப்பு, ஆரையம்பதி எனும் ஊரில் மூன்று தள கோபுரத்தைக் கொண்டு விளங்கும் ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலய பிரமோற்சவ தேர்த்திருவிழா ஆண்டுதோறும் சிறப்புடன் நடைபெற ஐயப்பனின் அருளாசி எமக்குக் கிடைத்துள்ளது. ஐயப்பனின் அடியார்கள் பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கியதோடு, பெருமளவில் நன்கொடைகளையும் வழங்கி ஊக்குவித்தமைக்கு எமது நிர்வாக சபை சார்பாக அவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் ஐயப்பனின் தேர்ப்பவனி வருடா வருடம் சிறப்பாகவும் மங்கலகரமாகவும் நடைபெற வாழ்த்துவதோடு, ஐயனின் அருள் நோக்கால் நலங்கள் யாவும் பெறவும், நாட்டில் சாந்தியும் சமாதானமும் நல்லுறவும் ஏற்படவும், நாட்டில் மழை பொழிந்து வளம் சுரந்து நாடும் வீடும் செழித்து, பஞ்சம், பட்டினி நீங்கி, மக்கள் இன்புற்று வாழவும், அவனி எங்கும் புகழ் பெறவும் இப்பக்திபூர்வமான பிரமோற்சவ தேர்த்திருவிழா அமையப் பெற்றிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐயப்பனின் வழிபாட்டில் கேந்திரஸ்தானமாக விளங்கும் ஆரையம்பதியில் அருள் சுரக்கும் ஸ்ரீ பரமநயினாரின் அருள் கிடைக்க, அடியார்களின் பூரண ஒத்துழைப்போடு ஐயனின் தேர்த்திருவிழா வருடாவருடம் மிகச்சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற இச்சிறப்பு நூல் மூலம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைவதோடு, எமது நாட்டிற்கும் கிராமத்திற்கும் ஸ்ரீ பரமநயினாரின் நல்லருளும் திருவருட் கடாட்சமும் கிட்டவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

"சுவாமியே சரணம் ஐயப்பா"

என்றும் இறைபணியில்

**க.வனராசா**

செயலாளர்

ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்

ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.



# பொருளாளரிடமிருந்து.....

இகபர வாழ்க்கையை உறுதிப்படுத்துவது வினை. நமக்கு நற்பலன்களை அளிப்பது நல்வினை. நல்வினையில் தோய்ந்து பிறவிப்பயனை மேம்படுத்த உதவுவது ஆலயம். ஆதலால்தான் நாம் ஆலயத்தையும், அதனுள் பொதிந்துள்ள ஆன்மீக விழிப்புணர்வையும் ஒன்றுபட்டு, தொடர்புபட்டுப் பெற்றுக்கொள்கின்றோம்.

கோபுரம் நிறுவுவதற்கு மக்கள் வழங்கிய பணிகளும், தொண்டுகளும், சேவைகளும், ஒற்றுமையும் என்றென்றும் நினைவுகொள்ளத்தக்கவை ஆகும். மேலும், கிடைக்கப்பெற்ற பரமநயினாரின் திருவருள் தேர் செய்யும் திருப்பணிக்கு அத்திவாரமாக அமையப் பெற்றிருந்து அப்பணி ஆரம்பமானது. சுமார் எட்டு மாத காலம் மட்டுமே இதற்குத் தேவைப்பட்டது.

கோபுர தரிசனம் புண்ணியமானது. அவ்வாறே தேர் இழுத்தலும், அடி அழித்தலும் புண்ணிய கருமங்களாகும். தேர்த் திருவிழாவில் மூல மூர்த்தி மட்டுமன்றி அத்தனை பரிவார மூர்த்திகளும் தேரில் அமர்ந்து உலா வருவார்கள்.

சமய நெறிகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் சிற்பிகளால் மட்டும்தான் தேர் நிர்மாணிக்கப்படும். சைவசமயத்தில் தேர் செய்வதற்காகக் குறிக்கப்பட்டிருக்கும் மரங்களை, பூசைக் கிரியைகள் நடாத்தி, அதற்கெனக் குறிக்கப்பட்ட சுபநேரத்தில் தேர் செய்யும் பணி ஆரம்பிக்கப்படும். தேருக்கான பாகங்கள் வேறு வேறாகச் செய்யப்பட்டு நல்ல சுபநாளிலே பாகங்கள் ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறும். இம்முறையாகவே நமது பேராலயத் தேரும் அமையப்பெற்றது.

சிவபெருமானின் ஐந்து கடமைகளில் தேர், மறைத்தலைக் குறிக்கும் நான்காம் கடமையாகும். இக்கிரியையின் பின் அடுத்து வருவது அருளல். இறை அருளால் நாம் நன்மை பெறுவோம். உயிர் வாழும், ஆன்ம ஈடேற்றம் அடைவோம்.

**திரு. பூ. லோகேஸ்வரன்**
பொருளாளர்,
ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்
ஆரையம்பதி - 01, ஆரையம்பதி.



# ஸ்தபதியின் உள்ளத்திலிருந்து

கிழக்கு இலங்கையின் வளமான நகர் மட்டுநகர். இங்கு எழில் மிக்க நகராம் ஆரையம்பதி. இங்கே இந்துப் பாரம்பரியம் நீண்ட ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இந்து ஆலயங்களை அதிகளவில் கொண்ட இடம் ஆரையம்பதி ஆகும். இங்கு அடியவர்களின் பிணி தீர்க்கும் பெருமானாகவும், அற்புதங்களிலும், அருளாட்சியிலும் மேலோங்கி இருப்பவராகவும் விளங்குபவர் புகழ்பூத்த ஸ்ரீ பரமநயினார் சுவாமிகளாவார். இவ் ஆலயத்தில் ஐயப்பனது புதுமைகள் அளப்பரியவை. இங்கு ஐயப்பர் பூரணை புட்கலை சமேதராக வீற்றிருக்கின்றார்.

இவ் ஆலயத்தில் சித்திரத் தேரினை அமைக்கும் பொறுப்பு எமக்கு கிடைத்ததை இட்டு மகிழ்வடைகின்றோம். இந்தத் தேரின் நாள்வேலை செய்யப்பட்டு மிகவும் குறுகிய காலப்பகுதியில் வெள்ளோட்டம் ஓடியமை எமது கலை உலகிலே ஆச்சரியத்திற்குரிய விடயமாகும். உண்மையில் இது ஐயப்பனின் புதுமையால் நிகழ்ந்தது என்றே கூறவேண்டும்.

எமது முயற்சியும், பங்களிப்பும் மிகையாக இருப்பினும், இறைவனின் துணையுடனே நிறைவேற்றப்பட்டது. எண்கோண வடிவில் அமைக்கப்பட்ட இந்த இரதமானது நான்கு குதிரைகள் பூட்டப்பட்டு வர்ண வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டு விக்கிரக கட்டைகள் மற்றும் அன்னக்கட்டைகள் பல பொருத்தப்பட்டு எட்டுத்திக்கும் யாழிகள் பொருத்தப்பட்டு சிறந்த முறையில் தேர் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டது.

எமது தேர் சிறப்புற அமைவதற்கு உதவியாகவும், ஊக்கமாகவும் எமக்குத் தோள் கொடுத்து உதவிய ஆலய நிர்வாகத்தினருக்கும் எமது சிற்பாலய சிற்பக் குழுவினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். முக்கியமாக ஆலய நிர்வாகத்தினரின் பங்களிப்பும், ஊக்குவிப்பும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

"சிந்தித்த எல்லாம் என் சிந்தையறிந்தே யுதவ
வந்த கருணை மழையே பராபரமே"

ஸ்தபதி
**விஸ்வப்பிரம்மஸ்ரீ முருகானந்தன் சிவகுமாரன்**
சிவசக்தி சிற்பாலயம், யாழ்ப்பாணம்.

# தேரும்
# தேர்த்திருவிழாவும்....

மனித வாழ்வின் தத்துவத்தில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபாவம், அனுக்கிரஹம் எனும் ஐந்து விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. நம் கர்ம வினைகளைப் போக்குவதற்கு சரீரம் தேவை. அந்தச் சரீரத்தைக் கொண்டுதான் இந்த ஜென்மத்தில் பயணிக்கின்றோம். ஸ்திதி என்பது நிலை. சம்ஹாரம் என்பது போக்குதல். திரோபாவம் என்பது மறைத்தல். அனுக்கிரஹம் என்பது பலாபலன்கள். நம் சரீரத்தைக் கொண்டு நம் கர்மவினைகளையெல்லாவற்றையும் போக்கி, ஒரு நிலைக்கு வந்த பின், திரும்பவும் நம்மை தன்னிடம் அழைத்துக்கொண்டு மோட்சம் தருகின்றான் இறைவன். இரதோற்சவம் என்னும் வைபவத்தை எவரொருவர் தரிசிக்கின்றாரோ அவரின் கர்ம வினைகள் அனைத்தும் நீங்கிவிடுவதாக ஞானநூல்கள் கூறுகின்றன. காரணம், தேரின் மேல் குறிப்பிடப்பிடப்பட்ட ஐந்து விடயங்களும் முதல் அடுக்கு, நடாசனம், விஸ்தார மட்டம், தேவாசனம், சிம்மாசனம் போன்ற அமைப்புக்களில் அமையப் பெற்றுள்ளன.

கடோபநிஷத்தில் மனிதன் உடலைத் தேராயும் உயிரைத் தேர்த் தலைவனாகவும் புலன்களை குதிரைகளாகவும், புத்தியைத் தேர்ப்பாகனாகவும் புலன்சார் விடயங்களைத் தேரோடும் வீதியாகவும் உவமித்திருக்கும் முற்றுருவம் ஒன்றைக் காணலாம். இவ்வாறே கிரேக்க, உரோம நாகரிகங்களிலும் தேர் சிறப்பிடம் பெறுவதை அவர்களின் இலக்கியங்களினூடாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

தேர் கோயிலின் கருவறை போன்றதே ஆகும். தேரும் உபபீடம், அதிட்டானம், பாதம், விமானம் போன்ற உறுப்புக்களினால் அமைந்திருப்பதனால் "கோயிலின் மறுவடிவம்" என்றும் "நகரும் கோயில்" எனவும் அழைக்கப்படுகின்றது. தேரினை எவ்வாறு வடிவமைக்க வேண்டுமென்பதற்கு மானசாரமும், விட்டுணு தத்துவ சங்கிருதையும் இலக்கணம் வகுத்திருக்கின்றன. தேர் நிறுத்தி வைக்கும் இடமானது "தேர் முட்டி" என்று அழைக்கப்படுகின்றது.

கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட இயலாத முதியோர்கள், நோயாளிகள் ஆகியோருக்காக இறைவனே கோயில் போன்ற அமைப்புடைய தேரில் ஏறி, அவர்களின் இல்லந்தோறும் வந்து அருள் வழங்கும் முகமாக

தேர்த்திருவிழாக்களைச் சான்றோர்கள் ஏற்படுத்தினார்கள். இந்தியாவின் தில்லையில் (சிதம்பரம்) மட்டும் நடராஜப்பெருமான் இருமுறை - ஆனி மாதத்திலும் மார்கழி மாதத்திலும் வலம் வருகின்றார். திருத்தேரின் வடம் பிடித்து இழுப்பதால் கைலையிலும் வைகுந்தத்திலும் இடம் கிடைக்குமென சான்றோர்கள் கூறியுள்ளனர். அங்கு தேர்த்திருவிழா நடைபெற்ற மறுநாள் தேர் சென்ற தடம் முழுவதும் பெண்கள் விழுந்து வணங்கி தங்கள் வேண்டுதல்களை இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றனர். இந்நிகழ்ச்சி "தேர்தடம் பார்த்தல்" என அழைக்கப்படுகின்றது.

தேர்த்திருவிழா உணர்த்தும் தத்துவமானது, உலகத்தை தேராகக் கொண்டு இறைவன் வலம்வருகின்றார் என்பதாகும். தேரிலுள்ள நான்கு குதிரைகளும் வேதங்களைக் குறிக்கின்றன. பிரம்ம தேவனே தேருக்குச் சாரதியாக விளங்குகின்றார். பூமியாகிய தேருக்கு சூரிய, சந்திரர் சக்கரங்களாக அமைந்துள்ளனர். சூரியன் அசுத்தத்தைப் போக்குவான். சந்திரன் மகிழ்ச்சியை அளிப்பான். ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற மும்மலங்களையும் அழிப்பதை நோக்கமாகக் கொண்டு இறைவன் வலம்வருகின்றான் என்று பல நூல்களும் தேரின் தத்துவத்தைக் குறித்து நிற்கின்றன. "இறைவனின் தேர் வடம் பிடித்தால் இறையுலகில் இடம் பிடிக்கலாம்" என்பதும் ஊர் வாக்குகள்.


தற்காலத்தில் பலதரப்பட்ட மக்களை ஒன்றும்சேர்க்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட ஒரு விழாவாகவும் தேர்த்திருவிழா கருதப்படுவதுடன், பல தத்துவங்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.

"சுவாமியே சரணம் ஐயப்பா"

**கோ. கிருபானந்தம்** (J.P)
தலைவர்
ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்
ஆரையம்பதி – 01,
ஆரையம்பதி.

# இந்துப் பண்பாட்டில்

# தேர் பற்றி...



தேர் என்னும் தமிழ்சொல், வினை ஆகிய இரு வடிவங்களிலும் தமிழ் மொழியில் வழங்குவதாகும், தேர் என்பதன் ஒத்த பொருட் சொற்களாக அரி, இயந்திரம், இரதம், கவரி, குயவு, திகரி, விமானம், வையம் என்பவை அமைகின்றன. அதேவேளையில் தேர் என்ற சொல்லிற்குப் பதிலாக நடைமுறை வழக்கில் அமையும். இரதம் என்ற சொல்லின் ஒத்த பொருட் சொற்களாக அரை, நாண், அவயவம், சாத்தியம், சுவைசூதம், பாதரசம், இரசலிங்கம், தேர்பண்டி என்பன அமைகின்றன.

தேர், இரதம் என்பவை பற்றிய கருத்து முரண்பாடு ஒன்று தற்கால மரபிலே தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம். தேரும் இரதமும் ஒரே வடிவாயினும், அமைப்பு முறையில் மாறுபட்டன. அல்லது சிறிது மாறுபட்டன என்ற கருத்தும் உள்ளது. மேல் விதானம் இயற்கையாக அமையும் ஊர்தியை தேர் என்று சொல்வதும் மரபு என்றும் அது நிரந்தரமாக அமையும் ஊர்தியை இரதம் என்று சொல்லும் மரபும் வந்துள்ளது.

தேர் என்பது தமிழ்ச்சொல் என்றும் இரதம் என்பது வடமொழிச் சொல் என்றும் கவனத்தில் கொண்டு நோக்கும்போது, ஒரே ஊர்தியைக் குறிக்கும் இரு மொழிச் சொற்களாகவே அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இலங்கையில் தேர் என்னும் சொல்லாட்சியே நடைமுறையில் வந்துள்ளது. தேர், இரதம் என்னும் இரு சொற்களும் ஒரே ஊர்தி வடிவினைக் குறிக்கும் இருமொழிச் சொற்களே என்ற அடிப்படையில் உண்மையை அறிய முடியும். ஆகவே இரதம் என்னும் முதன்மைப் பொருளிலே தேர் என்னும் சொல் அமைகின்றது என்ற சொல் பொருத்தமாகின்றது. நீண்ட ஒரு வரலாற்றைக் கொண்ட தேர் பின்னணியில் சிந்து வெளி நாகரீக காலத்தில் கிடைக்கப்பெற்ற இலச்சினைகளில் தேரை ஒத்த இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இருக்கு வேத காலத்தில் சூரியன், இந்திரன் போன்றோரின் ஊர்திகளாக தேர்களே பயன்படுத்தப்பட்டன. இருக்கு வேத காலத்தில் சிறப்பிடம் பெறும் யாகங்களுக்குரிய வேதிகைகள் போர் ஊர்தியானது இரத வடிவிலே அமைக்கப்பட்டன என்பதை சைத்திரீய சம்கிதையில் இருந்து அறியலாம்.

இதிகாச, புராண இலக்கியங்களிலும் இராவணன், தேவர்கள்

போன்றவர்களின் ஊர்திகளாக தேர் இருந்தமையை அவதானிக்கலாம். சிவபுராணங்களிலும் சூரனுக்கு சிவபெருமான் அளித்த இந்திரயாழம் எனப்படும் மாயாயில தேர் பற்றிய கருத்துக்களையும் கந்தபுராணத்தில் அறியலாம்.

சிவனுக்காக விஸ்வகர்மா நிர்மாணித்த வையம் அல்லது பிரபஞ்சம் எனப்படும் தேரில், மந்தரகேசரி மலைகள் அச்சாகவும், சூரிய சந்திரர் சக்கரங்களாகவும், ஆறு பருவங்கள் சந்திகளாகவும், பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுக்களாகவும், ஆகாயம் ஆசனமாகவும், உதய -அஸ்தகிரிகள் கூவிரமாகவும், நதிகள் கொடிகளாகவும், நட்சத்திரங்கள் விதானமாகவும், மோட்ச உலகம் மேல் விரிவு ஆகவும், யாகங்கள் சட்டங்களாகவும், நாள்கள் முதலியன குறுக்கு விட்டங்களாகவும், எட்டு மலைகள் தூண்களாகவும், அட்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்களாகவும், ஏழு கடல்கள் தேர்ச் சிலைகளாகவும், அறுபத்துநான்கு கலைகள் மூளைகளாகவும், வேதாங்க -பாஸ்கணு சாஸ்திரங்கள் மணிகளாகவும், வாயுக்கள் படிகளாகவும், நால் வேதங்கள் குதிரைகளாகவும், பிரமன் சாரதியாகவும் அமைய தேர் முழுமை பெறுகின்றது. பிரபஞ்ச வடிவமாக இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் ஈழவளநாட்டில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் இரதங்களானவை முழுமையாக உருவாக்கப்பட்டவையே. ஆகையால், ஈழத்தில் உள்ள ஆலயங்களில் தேர்கள் இரதம் என்றே சூட்டப்படும்.

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு நன்னகரில் ஆரையம்பதி என்னும் பொற்ரூரில் புகழ்பூத்த ஸ்ரீ பரம நயினார் ஐயப்ப சுவாமிகள் அடியவர்க்கு அருள்பாலிக்கின்றார். எம் பெருமானது இரதத்தினை வடிவமைக்கும் பேறு எமக்குக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றோம். எம்பெருமானது தேரினை நானும் எனது சகோதரனும் எமது சிற்பக் குழுவினருடன் இணைந்து இனிதே நிறைவேற்றினோம். இந்த இரதத்தினை அமைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினரின் விடாமுயற்சியும், மக்களது ஊக்குவிப்பும், ஐயப்பசுவாமிகளின் அருள் ஆசியும் துணையாக அமைந்தன.

மிகவும் குறுகிய காலப்பரப்பில் இந்த இரதம் எந்தவித இடர்பாடுகளும் இன்றி மிக சுலபமான முறையில் நிறைவேறியது. இதற்கு பிரதான மூர்த்தி ஆகிய ஐயப்ப சுவாமிகளின் அருளே முக்கிய காரணமாகும். இவ்வேளையில் எல்லாம் வல்ல ஐயப்பசுவாமிகளின் அருளாட்சி எல்லா அடியவர்களுக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால்
வேறொன்றும் அறியேன் பராபரமே"

ஸ்தபதி **விஸ்வப்பிரம்மஸ்ரீ முருகானந்தன் சிவநாதன்**
சிவசக்தி சிற்பாலயம், யாழ்ப்பாணம்.

## தர்மகர்த்தா சபை விபரம்
## ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலயம்
## ஆறையம்பதி - 01, ஆறையம்பதி

| காலம் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| சரியாக அறிய முடியவில்லை | திரு. ப.க. சுப்பிரமணியம் | அறிய முடியவில்லை | அறிய முடியவில்லை |
| சரியாக அறிய முடியவில்லை | திரு. சி. கதிர்காமத்தம்பி | அறிய முடியவில்லை | அறிய முடியவில்லை |
| 1970ம் ஆண்டு காலப்பகுதி | திரு. வே. நல்லதம்பி | திரு. க. பொன்னையா | திரு. சி. க. பொன்னம்பலம் |
| 17.02.1971 | திரு. வே. நல்லதம்பி | திரு. க. பொன்னையா | திரு. சி. க. பொன்னம்பலம் |
| 18.01.1972 | திரு. வே. நல்லதம்பி | திரு. சி. க. பொன்னம்பலம் | திரு. செ. சிவஞானம் |
| 29.08.1976 | திரு. த. கந்தப்பன் | திரு. சி. க. பொன்னம்பலம் | திரு. செ. சிவஞானம் |
| 29.01.1977 | திரு. கு. சுப்பிரமணியம் | திரு. சி. க. பொன்னம்பலம் | திரு. செ. சிவஞானம் |
| 06.02.1978 | திரு. கு. சுப்பிரமணியம் | திரு. சி. க. பொன்னம்பலம் | திரு. க. கிருஷ்ணபிள்ளை |
| 30.03.1980 | திரு. கு. சுப்பிரமணியம் | திரு. க. இராசரெத்தினம் | திரு. க. கிருஷ்ணபிள்ளை |

| காலம் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 09.01.1993 | திரு. நா. அழகுராசா | திரு. கா. தருமலிங்கம் | திரு. செ. சாந்தகுமாரன் |
| 29.05.1994 | திரு. நா. அழகுராசா | திரு. பீ. உமாபதிசிவம் | திரு. த. பரசுராமன் |
| 02.03.1996 | திரு. த. பரசுராமன் | திரு. நா. அழகுராசா | திரு. பீ. உமாபதிசிவம் |
| 11.03.2001 | திரு. பீ. உமாபதிசிவம் | திரு. நா. அழகுராசா | திரு. த. பரசுராமன் |
| 11.05.2002 | திரு. பீ. உமாபதிசிவம் | திரு. நா. அழகுராசா | திரு. த. துரைராசசிங்கம் |
| 16.05.2012 | திரு. சி. கோணலிங்கம் | திரு. கோ. கிருபானந்தம் | திரு. பூ. லோகேஸ்வரன் |
| 29.05.2016 | திரு. கோ. கிருபானந்தம் | திரு. சி. கோணலிங்கம் | திரு. பூ. லோகேஸ்வரன் |
| 27.11.2016 | திரு. கோ. கிருபானந்தம் | திரு. கு. வேலுப்பிள்ளை | திரு. பூ. லோகேஸ்வரன் |
| 12.06.2017 ↓ இன்றுவரை | திரு. கோ. கிருபானந்தம் | திரு. க. வனராசா | திரு. பூ. லோகேஸ்வரன் |

# முதலாம் பாகைத் தேர் வரவு

| இல | பெயர் | பற்.சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திருமதி.தனலெட்சுமி அன்ரனி | 2840 | 20,000.00 |
| 2 | திருமதி.சர்மிளா சிவாகரன் | 2843 | 15,000.00 |
| 3 | திரு.பூ. லோகேஸ்வரன் | 2813 | 15,000.00 |
| 4 | திருமதி.இ.யோகசுந்தரம் | 2829 | 10,000.00 |
| 5 | திரு.கா.வடிவேல் | 2811 | 10,000.00 |
| 6 | திரு.க.குணரெத்தினம் | 2812 | 10,000.00 |
| 7 | திரு.தயாளகுணம் மிருணன் | 2824 | 10,000.00 |
| 8 | திரு.சோ.சரவணபவான் | 2814 | 15,000.00 |
| 9 | திருமதி.இ.கிருஸ்ணபிள்ளை | 2832 | 10,000.00 |
| 10 | திருமதி.நே.தம்பிராசா | 2815 | 11,000.00 |
| 11 | திரு.த.சந்திரராஜன் | 2816 | 10,000.00 |
| 12 | திருமதி.செ.பேரின்பராசா | 2817 | 10,000.00 |
| 13 | திரு.சீ.பாலச்சந்திரன் | 2833 | 10,000.00 |
| 14 | திரு.த.குகராஜ் | 2836 | 10,000.00 |
| 15 | திரு.கா.கதிர்காமநாதன் | 2839 | 10,000.00 |
| 16 | திருமதி.த.திருக்கணேசன் | 2845 | 10,000.00 |
| 17 | திரு.சபாரெட்ணம் சந்திரகுமார் | 3098 | 10,000.00 |
| 18 | செல்வி.த.தில்லைநாயகி | 2850 | 10,000.00 |
| 19 | திருமதி.பி.சுப்பிரமணியம் | 2819 | 10,000.00 |
| 20 | திரு.க.ஜெயராஜ் | 2820 | 10,000.00 |
| 21 | செல்வி.நிர்மலநாத் ஷஞ்சனா | 2821 | 10,000.00 |
| 22 | திருமதி.பூபதி தியாகராசா | 2822 | 10,000.00 |
| 23 | திரு.மா.சாந்தராஜ் | 2856 | 10,000.00 |
| 24 | திரு.பொ.கிசோக்குமார் | 2827 | 8,000.00 |
| 25 | திருமதி.க.பரஞ்சோதி | 2828 | 11,000.00 |
| 26 | திரு.பீ.உமாபதிசிவம் | 2831 | 10,000.00 |
| 27 | திருமதி.பாக்கியவதி வனராசா | 3086 | 12,000.00 |
| 28 | திரு.கா.நவரெத்தினேஸ்வரராஜா | 2826 | 7,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 29 | அமரர்.த.சுகுமாரன் | 2830 | 7,000.00 |
| 30 | திரு.க.மாசிலாமணி | 2841 | 8,000.00 |
| 31 | திரு.ந.மகேஸ்வரன் | 2825 | 5,000.00 |
| 32 | திரு.சு.மயில்வாகனம் | 2842 | 10,000.00 |
| 33 | திரு.க.ஜீவராஜா | 2844 | 8,000.00 |
| 34 | திரு.பா.பூபாலபிள்ளை | 2846 | 10,000.00 |
| 35 | திருமதி.கி.கோணலிங்கம் | 2847 | 5,000.00 |
| 36 | திருமதி.வதனி ராஜு | 2849 | 5,000.00 |
| 37 | திருமதி.மோகனா நிர்மலகுமார் | 3087 | 5,000.00 |
| 38 | திருமதி.கலைவதனி குணதாஸ் | 2857 | 5,000.00 |
| 39 | திரு.செ.சீனித்தம்பி | 2835 | 3,000.00 |
| 40 | திரு.இ.சாமித்தம்பி | 2837 | 5,000.00 |
| 41 | திரு.த.மகேந்திரலிங்கம் | 2838 | 4,000.00 |
| 42 | செல்வி.சி.இரத்தினேஸ்வரி | 2834 | 2,700.00 |
| 43 | திரு.இ.தம்பிஐயா | 2848 | 2,000.00 |
| 44 | திரு.மூ.செல்வரெத்தினம் | 2852 | 3,000.00 |
| 45 | திரு.இ.திருநாவுக்கரசு | 2851 | 2,000.00 |
| 46 | திருமதி.வள்ளியம்மை மைக்கல் | 2854 | 2,000.00 |
| 47 | திரு.சீ.செந்தில்ராஜ் | 2853 | 2,000.00 |
| 48 | திரு.பெ.பத்மநாதன் | 2855 | 500.00 |
| 49 | திரு.பு.பொன்னையா | 3088 | 1,000.00 |
| | | | **399,200.00** |

## சித்திரத்தேருக்கான தேர்முட்டி உபயம்
## திரு.ச.சந்திரகுமார் (சுகந்தன்) – செல்வாநகர்

# இரண்டாம் பாகைத் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | அமரர்.சி.புவிராஜசிங்கம் | 2823 | 100,000.00 |
| 2 | திருமதி.யாழினி சிவகணேஸ்வரன் | 2896 | 52,000.00 |
| 3 | திரு.தி.தயாபரன் | 2995 | 15,000.00 |
| 4 | திரு.கோ.கிருபானந்தம் | 2860 | 15,000.00 |
| 5 | திரு..சோ.மகாலிங்கம் | 2859 | 10,000.00 |
| 6 | திரு.கா.பத்மநாதன் | 2861 | 10,000.00 |
| 7 | திரு.செ.ஆதவன் | 2862 | 10,000.00 |
| 8 | திருமதி.சங்கீதா சுதர்சன் | 2871 | 10,000.00 |
| 9 | திரு.த.சிவராசா | 2876 | 10,000.00 |
| 10 | திரு.பூ.சிவயோகராசா | 2879 | 10,000.00 |
| 11 | திரு.வே.வைரமுத்து | 2890 | 10,000.00 |
| 12 | திரு.கி.ரவிராசா | 2897 | 10,000.00 |
| 13 | திரு.க.கோகுலதீபன் | 2898 | 10,000.00 |
| 14 | அமரர்.க.சிவகுமாரன் | 2892 | 10,000.00 |
| 15 | திரு.த.திருச்செல்வம் | 2985 | 10,000.00 |
| 16 | திரு.அ.சிவராசா | 2869 | 7,000.00 |
| 17 | திரு.கி.மாதவன் | 2872 | 8,000.00 |
| 18 | திருமதி.சிவராஜினி மனுவல் | 2877 | 6,000.00 |
| 19 | திரு.கு.வரதராசா | 2864 | 9,000.00 |
| 20 | செல்வி.தே.ரக்ஷயா | 2894 | 8,000.00 |
| 21 | Dr.வை.பரணிதரன் | 2858 | 5,000.00 |
| 22 | திருமதி.தே.ஜீவானந்தம் | 2867 | 5,000.00 |
| 23 | திரு.மா.தங்கவடிவேல் | 2866 | 6,000.00 |
| 24 | திரு.சு.கமலன் | 2868 | 5,000.00 |
| 25 | திரு.அ.சுரேஸ் | 2870 | 5,000.00 |
| 26 | திரு.இ.கணேசமூர்த்தி | 2873 | 5,000.00 |
| 27 | திருமதி.தனுஜா குணலிங்கம் | 2875 | 5,000.00 |
| 28 | திரு.சி.ஜெயக்குமார் | 2874 | 10,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 29 | திரு.ம.ரகுபதி | 2878 | 4,000.00 |
| 30 | அமரர்.க.யோகராசா | 2880 | 8,000.00 |
| 31 | திரு.ச.சுஜேந்திரன் | 2881 | 4,000.00 |
| 32 | திருமதி.இ.பூபாலரெத்தினம் | 2883 | 4,000.00 |
| 33 | திரு.வ.வேந்தன் | 2884 | 5,000.00 |
| 34 | திரு.தி.திரவியராசா | 2886 | 5,000.00 |
| 35 | செல்வி.டெ.கிறிஸ்மிதா | 2887 | 5,000.00 |
| 36 | திரு.செ.கணபதிப்பிள்ளை | 2891 | 5,000.00 |
| 37 | திரு.ச.மகேசன் | 2863 | 3,000.00 |
| 38 | திரு.த.சிவபாதசுந்தரம் | 2865 | 4,000.00 |
| 39 | திரு.ந.சுரேஸ்வரன் | 3089 | 2,000.00 |
| 40 | திரு.ஞா.பேரின்பராசா | 2888 | 5,000.00 |
| 41 | திரு.பொ.சுப்பிரமணியம் | 2893 | 2,000.00 |
| 42 | அமரர்.கு.வேலுப்பிள்ளை | 2895 | 2,000.00 |
| 43 | திருமதி.G.கவிதா | 2818 | 5,000.00 |
| 44 | திரு.சா.புனிதசுந்தரம் | 2889 | 5,000.00 |
| 45 | திரு.மூ.அருளம்பலம் | 2882 | 1,000.00 |
| 46 | திரு.S.ரவிச்சந்திரன் | 2885 | 1,000.00 |
| 47 | திரு.ஜெ.ஹிருத்திஸ் | 3104 | 5,000.00 |
| 49 | செல்வி.யோ.கமலசாந்தினி | 3105 | 5,000.00 |
| | | | **456,000.00** |

# மூன்றாம் பாகைத் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திரு.க.காசிப்பிள்ளை குடும்பம் | 2807 | 50,000.00 |
| 2 | திரு.க.நடராஜா | 2899 | 20,000.00 |
| 3 | திரு.ஆ.யோகராசா | 2918 | 12,000.00 |
| 4 | திரு.து.ரவீந்திரராஜா | 2911 | 11,000.00 |
| 5 | திருமதி.வா.உசிதா | 2902 | 10,000.00 |
| 6 | திரு.தி.மயூரன் | 2903 | 10,000.00 |
| 7 | செல்வி.ரவிச்சந்திரன் துளசி | 2909 | 10,000.00 |
| 8 | திரு.கி.கனகசுந்தரம் | 2916 | 10,000.00 |
| 9 | திரு.மு.விக்கினேஸ்வரன் | 2921 | 10,000.00 |
| 10 | திருமதி.பவானி சங்கர் | 2926 | 10,000.00 |
| 11 | திரு.என்.சுபச்சந்திரா | 2913 | 10,000.00 |
| 12 | திரு.யோகேஸ்வரன் சரூபன் | 2901 | 10,000.00 |
| 13 | திருமதி.இ.சந்திரசேகரம்பிள்ளை | 2900 | 5,000.00 |
| 14 | திருமதி.க.பீதாம்பரம் | 2904 | 10,000.00 |
| 15 | திரு.சீ.சிவராசா | 2905 | 8,000.00 |
| 16 | சிவஸ்ரீ.நா.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் | 3099 | 5,000.00 |
| 17 | திரு.த.சரணியன் | 2906 | 5,000.00 |
| 18 | திரு.அ.துரைரெத்தினம் | 2907 | 2,000.00 |
| 19 | திரு.S.அரிச்சந்திரன் | 2908 | 9,000.00 |
| 20 | திரு.த.கிருபைராசா | 2910 | 3,000.00 |
| 21 | திரு.கி.பகீரதன் | 2912 | 7,000.00 |
| 22 | திரு.சோ.தனுசியன் | 2914 | 3,000.00 |
| 23 | திரு.த.ரூபாகரன் | 2915 | 8,000.00 |
| 24 | திரு.சீ.சோமசுந்தரம் | 2917 | 10,000.00 |
| 25 | திரு.S.ரவீந்திரன் | 2919 | 6,000.00 |
| 26 | திரு.த.ஜெகநாதன் | 2920 | 1,000.00 |
| 27 | திரு.இ.கனகரெத்தினம் | 2922 | 7,000.00 |
| 28 | திரு.கு.பாஸ்கரன் | 2923 | 5,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 29 | திரு.க.மகேந்திரா | 2924 | 5,000.00 |
| 30 | அமரர்.கண்ணம்மா நல்லதம்பி | 2804 | 5,000.00 |
| 31 | திரு.க.சிவனேசராசா | 2925 | 5,000.00 |
| 32 | திரு.K.யோகேஸ்வரன் | 2927 | 4,000.00 |
| 33 | திரு.கி.சபரிகேஷ் | 3090 | 5,000.00 |
| 34 | திரு.சா.சிவலிங்கம் | 2928 | 1,000.00 |
| 35 | திரு.நா.தயாபரன் | 3100 | 1,000.00 |
| 36 | திரு.மா.அரசரெத்தினம் | 3108 | 10,000.00 |
| | | | **303,000.00** |

# நான்காம் பாகைத் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | Dr.பாலசுந்தரம் கௌதனன் | 3085 | 25,000.00 |
| 2 | திருமதி.சீ.தங்கராசா குடும்பம் | 2935 | 20,000.00 |
| 3 | செல்வி.ஜீவராசா அன்சிக்கா | 2965 | 15,000.00 |
| 4 | திருமதி.நித்தியா தனுஷ்கரன் | 2929 | 10,000.00 |
| 5 | திருமதி.நி.குழந்தைவடிவேல் | 2931 | 10,000.00 |
| 6 | திரு.சோ.ஜெகநாதன் | 2932 | 10,000.00 |
| 7 | திரு.சி.ருத்திரகுமார் | 2933 | 10,000.00 |
| 8 | திரு.நா.சந்திரலிங்கம் | 2941 | 10,000.00 |
| 9 | திரு.கு.நவரெத்தினராஜா | 2942 | 10,000.00 |
| 10 | திரு.பூ.வீரசிங்கம் | 2943 | 10,000.00 |
| 11 | திரு.பொ.சிவனேசராசா | 2948 | 10,000.00 |
| 12 | திரு.வே.அசோகராசா | 2949 | 10,000.00 |
| 13 | திரு.ந.அமிர்தவாகனம் | 2951 | 10,000.00 |
| 14 | திரு.கா.புவனேந்திரராசா | 2953 | 10,000.00 |
| 15 | திரு.வ.ருவேந்திரராஜா | 2966 | 10,000.00 |
| 16 | திரு.P.பிரதீபன் | 2967 | 10,000.00 |
| 17 | செல்வி.S.அபிராமி | 2968 | 10,000.00 |
| 18 | செல்வி.ந.நவோஜினி | 2969 | 10,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 19 | திரு.யோகானந்தம் வருண் | 2973 | 10,000.00 |
| 20 | திரு.சீ.கந்தையா | 2961 | 10,000.00 |
| 21 | திருமதி.ப.நடராசா | 2955 | 10,000.00 |
| 22 | திரு.வீ.ராஜா | 2945 | 7,000.00 |
| 23 | திரு.து.நடராஜா | 2940 | 7,000.00 |
| 24 | திருமதி.க.பூபாலபிள்ளை | 2930 | 6,000.00 |
| 25 | திரு.த.சுப்பிரமணியம் | 2934 | 8,000.00 |
| 26 | திரு.க.பொன்னுத்துரை | 2936 | 5,000.00 |
| 27 | திரு.கா.தயாபரன் | 2937 | 5,000.00 |
| 28 | திருமதி.மா.கனகசுந்தரி | 2944 | 5,000.00 |
| 29 | திருமதி.பொ.உருத்திராதேவி | 2946 | 10,000.00 |
| 30 | திருமதி.அ.சக்திவேல் | 2947 | 6,000.00 |
| 31 | செல்வி.க.அஸ்விதா | 2952 | 5,000.00 |
| 32 | திரு.இ.ஜெயந்திரன் | 2954 | 5,000.00 |
| 33 | திரு.கோ.பிரேமசாயிசிவம் | 2959 | 5,000.00 |
| 34 | திரு.க.கோபாலநாதன் | 2960 | 6,000.00 |
| 35 | திரு.நா.பாலசுந்தரம் | 2971 | 3,000.00 |
| 36 | திரு.சு.அழகுதுரை | 3091 | 3,000.00 |
| 37 | திரு.அ.நடராசா | 2950 | 3,000.00 |
| 38 | திரு.கா.சோமசுந்தரம் | 3092 | 5,000.00 |
| 39 | திரு.த.துரைராஜசிங்கம் | 2938 | 5,000.00 |
| 40 | திருமதி.இ.குஞ்சித்தம்பி | 2939 | 5,000.00 |
| 41 | திருமதி.க.இராசம்மா | 2963 | 2,000.00 |
| 42 | திரு.தி.திருக்கணேஸ் | 2962 | 500.00 |
| 43 | திரு.மே.சண்முகராசா | 2964 | 1,500.00 |
| 44 | திருமதி.லோ.மகேஸ்வரி | 3093 | 2,000.00 |
| 45 | K.அனுசியா | 2972 | 2,000.00 |
| 46 | திரு.ம.இரத்தினேஸ்வரி | 2957 | 2,000.00 |
| 47 | திருமதி.மா.சிவசுப்பிரமணியம் | 2970 | 1,000.00 |
| 48 | திரு.சி.கோணலிங்கம் | 3102 | 10,000.00 |
| 49 | திரு.சி.கலைவேந்தன் | 2958 | 1,000.00 |
| | | | **366,000.00** |

# ஆரையூர்த் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திரு.ந.சுசாதரன் | 2810 | 100,000.00 |
| 2 | திரு.செ.கணபதிப்பிள்ளை (ஜீவன்) | 3027 | 20,000.00 |
| 3 | திரு.நா.நவரெட்ணராஜா | 2974 | 10,000.00 |
| 4 | திரு.சி.குணரெத்தினம் | 2975 | 10,000.00 |
| 5 | திரு.த.பாலச்சந்திரன் | 2980 | 10,000.00 |
| 6 | திரு.கா.குகச்செல்வன் | 2981 | 10,000.00 |
| 7 | திரு.வை.பிரதீபன் | 2984 | 10,000.00 |
| 8 | திரு.சுதேசன் ராம்பிரசாத் | 2988 | 10,000.00 |
| 9 | திரு.சி.நாராயணதேவா | 2805 | 10,000.00 |
| 10 | திரு.த.தம்பிப்பிள்ளை | 3022 | 10,000.00 |
| 11 | திரு.இ.சாந்தமோகனதாஸ் | 3024 | 10,000.00 |
| 12 | திரு.செ.தங்கவேல் | 2987 | 7,000.00 |
| 13 | திரு.K.மகேசன் | 2990 | 7,000.00 |
| 14 | திரு.சு.கேதீஸ்வரன் | 2803 | 5,000.00 |
| 15 | Dr.திருமதி.சறோஜினி பாக்கியராசா | 2976 | 5,000.00 |
| 16 | திரு.சீ.ஆறுமுகம் (நவம் மாஸ்ரர்) | 2977 | 5,000.00 |
| 17 | திரு.சி.வாமதேவன் | 2982 | 5,000.00 |
| 18 | திரு.வி.கதிரவேற்பிள்ளை | 2983 | 5,000.00 |
| 19 | திரு.த.தங்கவடிவேல் | 2986 | 5,000.00 |
| 20 | திரு.இ.தங்கவடிவேல் | 2989 | 5,000.00 |
| 21 | திரு.அ.யுகராசா | 2996 | 5,000.00 |
| 22 | திரு.நாகமணி ஸ்ரீதாஸ் | 3001 | 5,000.00 |
| 23 | திரு.செ.பாலசுப்பிரமணியம் | 3004 | 5,000.00 |
| 24 | செல்வி.வி.கமலபூசணி | 3006 | 5,000.00 |
| 25 | திரு.மு.மயூரேஸ்வரன் | 3010 | 5,000.00 |
| 26 | திரு.நா.கருணாகரன் | 3011 | 5,000.00 |
| 27 | திரு.கோ.கஜசீலன் | 3023 | 5,000.00 |
| 28 | திருமதி.சி.பிரார்த்தனா | 3026 | 5,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 29 | திரு.க.ஜெயக்குமார் | 3028 | 10,000.00 |
| 30 | திரு.சா.தவராசா | 3029 | 5,000.00 |
| 31 | திரு.த.சந்திரமோகன் | 3032 | 5,000.00 |
| 32 | திருமதி.பரமக்குட்டி செல்வராஜா | 3009 | 6,000.00 |
| 33 | திரு.S.சச்சிதானந்தம் | 2998 | 4,000.00 |
| 34 | திருமதி.பி.சூரியகுமாரி | 2993 | 3,000.00 |
| 35 | திருமதி..அ.ஜெகநாதன் | 2994 | 3,000.00 |
| 36 | திரு.நா.ஸ்ரீமுருகதாஸ் | 2991 | 3,000.00 |
| 37 | திரு.த.ருத்ரா | 2978 | 3,500.00 |
| 38 | திரு.கா.செல்வராஜா | 3094 | 3,000.00 |
| 39 | திரு.ப.நல்லதம்பி | 2979 | 2,000.00 |
| 40 | திரு.சி.வசிதரன் | 2992 | 2,000.00 |
| 41 | திரு.ஜெயக்கமலன் தியாஸ் | 2997 | 2,000.00 |
| 42 | திரு.இ.சித்திரவேல் | 2999 | 2,000.00 |
| 43 | திருமதி.சசிரேகா தர்மரெட்ணம் | 3000 | 2,000.00 |
| 44 | திருமதி.உ.தெய்வேந்திரகுமார் | 3002 | 3,000.00 |
| 45 | Dr.திருமதி.K..பாரதி | 3003 | 2,000.00 |
| 46 | திரு.த.ஜெயாபரன் | 3005 | 1,000.00 |
| 47 | திரு.இ.கோபாலசுந்தரம் | 3007 | 1,000.00 |
| 48 | திரு.கு.சுதர்சன் | 3008 | 2,500.00 |
| 49 | திருமதி.வாசுகி சசிகுமார் | 3012 | 3,000.00 |
| 50 | செல்வி.S.தர்ப்பனா | 3013 | 1,000.00 |
| 51 | திரு.செ.தம்பிஜயா | 3014 | 1,000.00 |
| 52 | திரு.K.சிவராசா | 3015 | 500.00 |
| 53 | திரு.அ.யோகிதாஸன் | 3016 | 2,000.00 |
| 54 | செல்வி.S.ஜனனி | 3017 | 2,000.00 |
| 55 | திரு.த.ரகுபதி | 3018 | 1,000.00 |
| 56 | திரு.K.தெய்வேந்திரன் | 3019 | 500.00 |
| 57 | திரு.த.ரவீந்திரன் | 3020 | 10,000.00 |
| 58 | திரு P.இராஜரெத்தினம் | 3021 | 3,500.00 |
| 59 | திரு.ரா.தயாளன் | 3025 | 1,000.00 |
| 60 | திரு.S.நாகமணி | 3030 | 1,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 61 | திரு.கா.பவளேந்திரன் | 3031 | 1,000.00 |
| 62 | திரு.வை.சிவயோகராசா | 3101 | 8,000.00 |
| | | | **399,500.00** |

# வெளியூர்த் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | Eng திரு.யோ.கோபிநாத் மட்டக்களப்பு | 3033 | 20,000.00 |
| 2 | Dr.திருமதி.ஜெ.இராஜசேகரம் (சாமித்தம்பி குடும்பம்) மட்டக்களப்பு | 3037 | 20,000.00 |
| 3 | திருமதி.சுமதி துரைச்சாமி (மட்) | 3043 | 20,000.00 |
| 4 | திரு.கா.விவேகானந்தராசா (மட்) | 3035 | 10,000.00 |
| 5 | திருமதி.மு.நல்லதம்பி (கல்லடி) | 3034 | 10,000.00 |
| 6 | திரு.ந.கணேசலிங்கம்(மட்) | 3039 | 10,000.00 |
| 7 | திருமதி.க.குகதாஸ் (மட்) | 3041 | 10,000.00 |
| 8 | திரு.கே.சிவக்கொழுந்து (மட்) | 2802 | 10,000.00 |
| 9 | திரு.க.லோகநாதன் (கல்லடி) | 3046 | 10,000.00 |
| 10 | Eng திரு.வே.நவரெத்தினம் மட்) | 3047 | 10,000.00 |
| 11 | திரு.க.ஹரிகரராஜ் (கல்லடி) | 3050 | 10,000.00 |
| 12 | திரு.S.வெற்றிவேல் (மட்) | 3054 | 10,000.00 |
| 13 | திரு.கே.ஹரிதாஸ் (மட்) | 3055 | 10,000.00 |
| 14 | திருமதி.மேகலா நல்லரெத்தினம் (மட்) | 3070 | 10,000.00 |
| 15 | திரு.சி.இளமுருகமூர்த்தி (நாவற்குடா) | 3067 | 9,000.00 |
| 16 | திரு.சி.கமலநாதன் (நாவற்குடா) | 3047 | 7,000.00 |
| 17 | திரு.சீனித்தம்பி சசிதரன் (மட்) | 3036 | 5,000.00 |
| 18 | திரு.கா.நடராசா (கல்லடி) | 3038 | 5,000.00 |
| 19 | திரு.த.கிருஸ்ணமூர்த்தி (கல்லடி) | 3040 | 5,000.00 |
| 20 | திருமதி.த.தர்மலிங்கம் (கல்லடி) | 3044 | 6,000.00 |
| 21 | திரு.நா.உதயகுமார் (திருக்கோவில்) | 3045 | 5,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 22 | திரு.வே.தவராசா(கருவேப்பங்கேணி) | 3095 | 5,000.00 |
| 23 | திரு.த.சத்தியசீலன் (மட்) | 3053 | 5,000.00 |
| 24 | திரு.இ.கனகலிங்கம் (மட்) | 3056 | 5,000.00 |
| 25 | திருமதி.மனோன்மணி கணேசமூர்த்தி(மட்) | 3058 | 5,000.00 |
| 26 | Dr.கி.மோகனசுந்தரம் (மட்) | 3059 | 5,000.00 |
| 27 | திரு.தி.கனகராசா (மஞ்சந்தொடுவாய்) | 3061 | 5,000.00 |
| 28 | திரு.த.இராஜலிங்கம் (மஞ்சந்தொடுவாய்) | 3063 | 5,000.00 |
| 29 | திருமதி.தமிழ்வாணி தவகுமார்(முகத்துவாரம்) | 3066 | 5,000.00 |
| 30 | திரு.அ.அமிர்தலிங்கம் (நரிப்புல்தோட்டம்) | 3068 | 5,000.00 |
| 31 | திரு.சி.கிருஷாந்தன் (கல்லடி) | 3069 | 5,000.00 |
| 32 | திரு.நா.பீதாம்பரம் (வாழைச்சேனை) | 3051 | 5,000.00 |
| 33 | திரு.த.தவகுலராஜன் (யாழ்ப்பாணம்) | 3071 | 5,000.00 |
| 34 | திருமதி.சுபாஜினி பிரதீபன் (நாவற்குடா) | 3057 | 4,000.00 |
| 35 | திரு.தா.பிரியதர்ஷன் (நாவற்குடா) | 3048 | 3,000.00 |
| 36 | திருமதி.தேவினா கிருஷான் (நாவற்குடா) | 3052 | 3,000.00 |
| 37 | திரு.க.கலாதரன் (மட்) | 3060 | 2,000.00 |
| 38 | திரு.S.சண்முகநாதன் (கல்லடி) | 3065 | 2,000.00 |
| 39 | திரு.ச.விஜயரெத்தினம் (கல்லடி) | 3073 | 2,000.00 |
| 40 | திரு.ந.கதிர்காமத்தம்பி (கல்லடி) | 3064 | 1,500.00 |
| 41 | திருமதி.சா.ஜெயசாந்தினி (நொச்சிமுனை) | 3072 | 1,000.00 |
| 42 | திரு.பீ.சுரேஸ் (கல்லடி) | 3062 | 1,000.00 |
| 43 | திரு.S.விக்கினேஸ்வரன் (மட்) | 3042 | 1,000.00 |
| 44 | திரு.மு.சிவநாதன், திரு. மு. சிவகுமாரன் (சித்திரத் தேர் குழவினர்) | 3106 | 50,000.00 |
| | | | **342,500.00** |

# வெளிநாட்டுத் தேர் வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | திருமதி.உதயநந்தினி கணேஷ்ராஜ் (கனடா) | 2808 | 200,000.00 |
| 2 | திரு.பெரியதம்பி கோணேசமூர்த்தி (அவுஸ்திரேலியா) | 2801 | 50,000.00 |
| 3 | திரு.ந.உதயன் (அவுஸ்திரேலியா) | 3083 | 50,000.00 |
| 4 | அமரர் திருமதி.சி.சிவலோகநாயகி (சி.விக்கினேஸ்வரன் - அவுஸ்திரேலியா) | 3080 | 35,000.00 |
| 5 | திரு.கனகரெத்தினம் சாரங்கன் (பிரான்ஸ்) | 3076 | 35,000.00 |
| 6 | திருமதி.டினேஸ்கரன் தர்ஷி (அவுஸ்திரேலியா) | 3079 | 25,000.00 |
| 7 | திரு.காசிப்பிள்ளை யோகேந்திரன் (கனடா) | 3077 | 25,000.00 |
| 8 | திருமதி.உதயபவான் கிருஷாந்தினி (லண்டன்) | 3075 | 20,000.00 |
| 9 | திரு.சோமசுந்தரம் ஜெயகாந்தன் (லண்டன்) | 3078 | 20,000.00 |
| 10 | திரு.ந.கிருஷாந்தன் (சவூதி) | 3074 | 10,000.00 |
| 11 | திரு.சா.ஜெயானந்தன் (அகிலன்) (அவுஸ்திரேலியா) | 3096 | 10,000.00 |
| 12 | ஜெகதாம்பிகை விக்னேஸ்வரன் - சுவீஸ் | 3107 | 100,000.00 |
| 13 | பார்த்தீபன் சன்சோ - லண்டன் | 3103 | 50,000.00 |
| 14 | திரு.ச.சித்தானந் - அவுஸ்ரேலியா | 3109 | 25,000.00 |
| | | | **655,000.00** |

# அன்னதான வரவு

| இல | பெயர் | பற். சீட்டு இல | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | க.நடராஜா | 3082 | 55,000.00 |
| 2 | ப.பிரதீபன் | 2717 | 30,000.00 |
| | | | **85,000.00** |

# சித்திரத்தேர் அமைத்தல் - வரவு செலவு அறிக்கை

| இல | விபரங்கள் | வரவுகள் (ரூபாய்) | செலவுகள் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | முதலாம் பாகை வரவுகள் | 399,200.00 | |
| 2 | இரண்டாம் பாகை வரவுகள் | 456,000.00 | |
| 3 | மூன்றாம் பாகை வரவுகள் | 303,000.00 | |
| 4 | நான்காம் பாகை வரவுகள் | 366,000.00 | |
| 5 | ஆரையூர் வரவுகள் | 399,500.00 | |
| 6 | வெளியூர் வரவுகள் | 342,500.00 | |
| 7 | வெளிநாட்டு வரவுகள் | 655,000.00 | |
| 8 | அன்னதான வரவுகள் | 85,000.00 | |
| 9 | 2ம் பாகை திருவிழா குழுவினரின் அன்பளிப்பு | 5,000.00 | |
| 10 | 4ம் பாகை திருவிழா குழுவினரின் அன்பளிப்பு | 6,000.00 | |
| 11 | வங்கி வரவுகள் ( வட்டி ) | **8,211.00** | |
| 12 | தேருக்கான ஏனைய வரவுகள் | 300,000.00 | |
| | **மொத்த வரவுகள்** | **3,325,411.00** | |
| | | | |
| 13 | தேர் நிர்மாணம் - ஆச்சாரியார் கொடுப்பனவு (ப.சீ.இல.64) | | 2,020,000.00 |
| 14 | அன்னதானம் (ப.சீ.இல.59,60,61,62,63) | | 105,165.00 |
| 15 | ஆச்சாரியார் உணவு, வேட்டி, தட்சணை, ஒலிபெருக்கி பிராயச்சித்த அபிஷேகம் - (ப.சீ.இல.5,46,17,4,34,38,40) | | 181,300.00 |
| 16 | மங்கள வாத்தியம், சொற்பொழிவு நடனம் (ப.சீ.இல.39,41,42) | | 101,000.00 |

| இல | விபரங்கள் | வரவுகள் (ரூபாய்) | செலவுகள் (ரூபாய்) |
|---|---|---|---|
| 17 | சித்திரத் தேர் வேலை ஆரம்பித்தல், வெள்ளோட்டம், தேர் ஏற்றி வந்த வாகனக் கூலி (ப.சீ.இல.1,2,6,7,8,9,10,11,12,13,14, 15,16,18,19,20,21,22,23,24,25,26,27, 28,29,30) | | 103,832.00 |
| 18 | தேர்த்திருவிழா, தானப்பெட்டி, மரக்கறி, குரு தட்சணை, கணக்கறிக்கை அச்சிட்ட செலவு (ப.சீ.இல.31,32,33,35,36,37,43,44,45, 47,48,49,50,51,52,53,54,55,56,57,58 ,3,65) | | 153,040.00 |
| | **மொத்தச் செலவு** | | **2,664,337.00** |

| | |
|---|---|
| **மொத்தச் வரவுகள்** | **3,325,411.00** |
| **மொத்தச் செலவுகள்** | **2,664,337.00** |
| **தேறிய வரவுகள் (மீதி)** | **661,074.00** |

## கணக்காளரின் அறிக்கை

16.01.2018 திகதிய ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலய பரிபாலன சபையினரின் கடித வேண்டுகோளின் நிமித்தம் மேற்படி பேராலயத்தில் சென்றவருடம் உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் தொடர்புபட்ட வரவு செலவுகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் எண் கணித ரீதியாக சரி பார்க்கப்பட்டு மேற்படி வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

தொழில் புரியுமிடம்
மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு.

**திரு. ச. சுந்தரலிங்கம்,**
இலங்கை கணக்காளர் சேவை
ஆரையம்பதி

## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வுகளில் சில...

**28.06.2017**













# 2017 சித்திரத்தேரோட்ட நிகழ்வுகளில் சில...

**29.06.2017**















# 2017 சித்திரத்தேரோட்ட நிகழ்வுகளில் சில...

**29.06.2017**

















## 2018 சித்திரத்தேரோட்ட நிகழ்வுகளில் சில...
**20.06.2018**






# நன்றிகள் சமர்ப்பணம்



எம் பெருமான் ஐயப்பனாம்....
எத்திக்கும் காத்தருளும்....
எழில்மிகு காவலனாம்....
எழுந்தருளி வலம் வரவே....
உருவாக்கினர் தேர் ஒன்றை....
ஊர்மக்கள் சேர்ந்திட்டே....
ஊர்வலத் தேர் அழகு கண்டு....
உவந்திட்டார் ஐயப்பனும்....
மகிழ்ந்திட்டோம் மக்கள் நாமே....
சித்திரமாய் அமைந்த எங்கள்
சித்திரத் தேர் அதனை
சீராக அமைத்தோருக்கும்....
சிறப்பாக நிதி வழங்கி....
செழிப்பாக பல் உதவி
புரிந்த எம் மக்களுக்கும்....
கூறுகின்றோம் பல்கோடி
நன்றிதனை அகமகிழ்ந்து....!



**ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) பேராலய**
**பரிபாலன சபையினர்**
**ஆரையம்பதி - 01, ஆரையம்பதி**



அம்பாள் அச்சகம், பிரதான வீதி, திமிலைதீவு, மட்டக்களப்பு.